செ.வெ.எண்66/2017 நாள்:21.09.2017

**சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் ஓய்வூதியதாரர்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் ஓய்வூதியதாரர்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் (21.09.2017) இன்று காலை 10.30 மணியளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களிடமிருந்து கோரிக்கை தொடர்பாக 16 மனுக்கள் பெறப்பட்டன. இம்மனுக்கள் மீது 15 தினங்களுக்குள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. குடும்பப் பாதுகாப்பு நல நிதி மற்றும் மருத்துவ நல நிதிக்கான ரூ.4,66,654/-க்கான 15 காசோலைகள் சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஓய்வூதியர்களுக்கு வழங்கினார்.

இக்கூட்டத்தில் இணை இயக்குநர் (ஓய்வூதிய இயக்குநரகம்) திருமதி.எஸ்.மஞ்சுளா, துணை இயக்குநர் (ஓய்வூதிய இயக்குநரகம்) திரு.கி.மதிவாணன், மாவட்ட கருவூல அலுவலர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்), துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,

சிவகங்கை.